**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR QUARRYING PROPOSAL OVER AN EXTENT OF 1.60.50 HA - M/S. S. BALAKRISHNAN ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO.203/7 OF APPAYANAYAKANPATTI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 23.09.2025, 02.00 P.M AT M/S.PERUNTHALAIVAR KU. KAMARAJAR THIRUMANA MAHAL, DOOR NO: 4/297, MELANMARAINADU VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S.K.Kanagaraj | : | Revenue Divisional Officer, Sattur, Virudhunagar District. |
| 2 | Er. J. Hamoneth Joesun | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar District. |
| 3 | Tmt.N.Kalaivani | : | Tahsildar Vembakottai |
| 4 | Er. V.Kalaijothi | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar District. |
| | As per Attendance Register | : | Government Officials, Public and Project proponent 111 Nos (List enclosed). |

The Public Hearing was scheduled to be held at 11.00 AM on 23.09.2025. But the Public Hearing was postponed to 02.00 PM with prior approval from the District Collector due to the conduct of a review by Hon'ble Deputy Chief Minister at District Collectorate in Virudhunagar District. Accordingly the meeting started at M/s.Perunthalaivar Ku.Kamarajar Thirumana Mahal, Door No: 4/297, Melanmarainadu Village, Vembakottai Taluk, Virudhunagar District under EIA Notifications, 2006 for the Quarry proposal over an extent of 1.60.50 Ha - M/s. S. Balakrishnan Rough Stone and Gravel Quarry, S.F.No.203/7 of Appayanaickenpatti Village, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer, Sattur, other Government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 15.08.2025. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the

District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written statements would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu to Consider the issue of Environmental Clearance to the proposed project.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. Subsequently, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s. S. Balakrishnan Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

Further, the public has furnished their views with respect to the project as follows –

1. **Mr. Shanmugaraj, Kundampatti Village**

Mr. Shanmugaraj said that quarries are the main occupation in our village and when there is no agriculture, quarries provide employment opportunities, so this quarry should definitely be established.

**2.Mrs.Senbhagavalli, Kundampatti Village**

Ms.Senbhagavalli said that, this quarry is essential for our livelihood and therefore she request you to grant permission for this quarry.

**3. Mrs. Kaviselvi, Kundampatti Village**

Mrs. Kaviselvi has requested permission for this quarry, saying that the establishment of this quarry will provide employment and the income generated from it will help in the Education of her children.

**4.Mrs. Maheshwari, Appaiyanayakkanpatti Village**

Mrs. Maheshwari welcomed the project, saying that her two children's are studying in college, she has been working in this quarry for eight years, and the income from this quarry is the source of her livelihood.

**5. Mrs. Kaliammal, Appaiyanayakkanpatti Village**

Mrs. Kaliammal said that she has been working in this quarry for the past 15 years and therefore requested permission to be granted for this quarry.

**6. Mr. Gurusamy, Kundampatti Village**

Mr. Gurusamy said that the establishment of this quarry will provide employment and therefore requested permission to be granted for this quarry.

**7.Mrs. Mookkammal, Appaiyanayakkanpatti village**

Mrs. Mookkammal requested that this quarry be established for our livelihood.

**8.Mr. Sankaranarayanan, Kundampatti village**

Mr. Sankaranarayanan requested that permission be granted for this quarry, stating that the establishment of this quarry will improve the economy, and that 200 people are employed in this quarry and that the income from it will help with the education fees of their children.

**9. Mr. Veluchamy, Appaiyanayakkanpatti Village**

Mr. Veluchamy said that our livelihood will improve only if permission is given for this quarry, so he requested permission for this quarry.

**10. Mr. Azhwarasami, Vaiyakundampatti Village**

Mr. Azhwarasami said that the establishment of this quarry will improve our livelihood, and that sand and gravel required for construction will be easily available, so he requested permission for this project.

**11. Mrs. Gomathi, Appaiyanayakkanpatti Village**

Mrs. Gomathi said that this quarry is necessary for our livelihood, so she requested permission for this quarry.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their furthermore views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and informed that the Minutes of the Meeting along with Compact Disc consisting the entire videographed Public Hearing will be forwarded to the SEIAA for further actions. He also thanked all and requested to furnish their views if any in written of petitions.

Total number of written petitions received - 01

With this, the meeting came to the end.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar.

Revenue Divisional Officer,
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 9 – pages, 111 persons).
2. Videograph of public hearing meeting (CD format).
3. Copy of Public Notices (Both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமம், புல எண்.203/7-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.எஸ்.பாலகிருஷ்ணன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 23.09.2025 பிற்பகல் 02.00 மணியளவில் தி/ள்.பெருந்தலைவர் கு.காமராஜர் திருமண மஹால், கதவு எண்.4/297, மேலான்மறைநாடு கிராமம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.சு.க.கனகராஜ் | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி.ஜே.ஹேமந்த் ஜோசன் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | திருமதி.ந.கலைவாணி | : | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை |
| 4 | பொறி.வே.கலைஜோதி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| | வருகை பதிவேட்டின் படி | : | அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 111 நபர்கள்.<br>(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது). |

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமம், புல எண்.203/7-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள்.எஸ்.பாலகிருஷ்ணன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் தி/ள்.பெருந்தலைவர் கு.காமராஜர் திருமண மஹால், கதவு எண்.4/297, மேலான்மறைநாடு கிராமம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 23.09.2025 முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறுவதாக இருந்த கூட்டமானது, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆய்வு பணிகள் விருதுநகர் மாவட்டத்தில் 23.09.2025 அன்று நடைபெற்றதால் மேற்படி கருத்துக் கேட்புக் கூட்டமானது பிற்பகல் 02.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர், விருதுநகர் அவர்களின் ஒப்புதலுடன் நடைபெற்றது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகிய நாளிதழ்களில் 15.08.2025

அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனவும் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்புகூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேற்படி குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்கும் பொருட்டு அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன் பின் தி/ள்.எஸ்.பாலகிருஷ்ணன் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. **<u>திரு. சண்முகராஜ், குண்டம்பட்டி கிராமம்</u>**

திரு.சண்முகராஜ் அவர்கள், எங்கள் கிராமத்தில் குவாரிகள் மட்டும் தான் முதன்மை தொழிலாக உள்ளது என்றும், மேலும் விவசாயம் இல்லாத நேரங்களில் குவாரிகளால்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது எனவே இந்த குவாரி கண்டிப்பாக அமைய வேண்டும் என தெரிவித்தார்.

**<u>2.திருமதி.செண்பகவள்ளி, குண்டம்பட்டி கிராமம்</u>**

திருமதி.செண்பகவள்ளி அவர்கள், இந்த குவாரியானது எங்கள் வாழ்வாதாரத்திற்கு அவசியமானதாக உள்ளது எனவே இந்த குவாரிக்கு அனுமதி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**3.திருமதி.கவிச்செல்வி, குண்டம்பட்டி கிராமம்**

திருமதி.கவிச்செல்வி அவர்கள், இந்த குவாரி அமைவதினால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் இதன்மூலம் கிடைக்கும் வருமானத்தினால் அவர்களது குழந்தைகளுக்கு கல்வி பயில உதவியாக இருக்கும் என்று கூறி இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**4.திருமதி.மகேஸ்வரி, அப்பையநாயக்கன்பட்டி கிராமம்**

திருமதி.மகேஸ்வரி அவர்கள், அவர்களுடைய இரு குழந்தைகள் கல்லூரியில் பயின்று வருகின்றனர் என்றும், இந்த குவாரியில் எட்டு வருடமாக வேலைபார்த்து வருவதாகவும், இந்த வருமானத்தினை நம்பிதான் வாழ்வாதாரம் உள்ளதாக கூறி இத்திட்டத்தினை வரவேற்றார்.

**5.திருமதி.காளியம்மாள், அப்பையநாயக்கன்பட்டி கிராமம்**

திருமதி.காளியம்மாள் அவர்கள், 15 வருடங்களாக இந்த குவாரியில்தான் வேலை பார்த்து வருவதாகவும், ஆகவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**6.திரு.குருசாமி, குண்டம்பட்டி கிராமம்**

திரு.குருசாமி அவர்கள், இந்த குவாரி அமைவதால் வேலைவாய்ப்பு கிடைக்கும் எனவே, ஆகவே இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**7.திருமதி.மூக்கம்மாள், அப்பையநாயக்கன்பட்டி கிராமம்**

திருமதி.மூக்கம்மாள் அவர்கள், எங்கள் வாழ்வாதாரத்திற்கு இந்த குவாரி அமைய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

**8.திரு.சங்கரநாராயணன், குண்டம்பட்டி கிராமம்**

திரு.சங்கரநாராயணன் அவர்கள், இந்த குவாரி அமைவதால் பொருளாதாரம் மேம்படும் என்றும், மேலும் இந்த குவாரியில் 200 நபர்கள் வேலைபார்த்து வருவதாகவும் அதிலிருந்து வரும் வருமானம் தங்களுடைய குழந்தைகளின் கல்வி கட்டணத்திற்கு உதவுவதாகக் கூறி இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**9.திரு.வேலுச்சாமி, அப்பையநாயக்கன்பட்டி கிராமம்**

திரு.வேலுச்சாமி அவர்கள், இந்த குவாரிக்கு அனுமதி வழங்கினால்தான் எங்கள் வாழ்வாதாரம் மேம்படும் ஆகவே இக்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**10.திரு.ஆழ்வார்சாமி, வையகுண்டம்பட்டி கிராமம்**

திரு.ஆழ்வார்சாமி அவர்கள், இந்த குவாரி அமைவதினால் எங்கள் வாழ்வாதாரம் மேம்படும் என்றும், மேலும் வீடு கட்டுவதற்கு தேவையான மணல் மற்றும் ஜல்லி போன்றவை எளிதில் கிடைக்கும் என்றும், ஆகவே இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

**11.திருமதி.கோமதி, அப்பையநாயக்கன்பட்டி கிராமம்**

திருமதி.கோமதி அவர்கள், இந்த குவாரி எங்கள் வாழ்வாதாரத்திற்கு அவசியமானதாக உள்ளதாகவும், எனவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறுயாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ அடங்கிய குறுந்தகடு மற்றும் எழுத்துபூர்வமான கூட்ட நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பரிசீலினை செய்யும் பொருட்டு அனுப்பிவைக்கப்படும் எனவும், மற்றும் எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை - 01

அத்துடன் பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர் மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 9 பக்கங்கள், 111 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).